


# தட்சிண கைலாச புராணம்



## அறிமுகம்

சிங்கைச் செகராசசேகரனால் பாடப்பெற்ற தட்சிண கைலாச புராணம் திருக்கோ-ணேஸ்வரம் பற்றிய தலபுராணமாகும். சைவராசபண்டிதர் என்னும் குருவின் வேண்டுகோளுக்கு அமையச் செகராசசேகர மகாராசன் பாடினார். தலபுராணங்களில் இந்நூல் பழமையானவற்றுள் ஒன்று. திருக்கோணேஸ்வரம் பற்றிக் கிடைக்கின்ற இலங்கையில் எழுந்த நூல்களில் இதுவே புராதனமானது. ஆலயம் சிறப்புற்றிருந்த காலத்தில் இந்நூல் பாடப் பெற்றமை குறிப்பிடற்குரியது.

மகா புராணங்களிலே கூறப்படுகின்ற இந்து சமய தத்துவங்களையும், சைவசமயக் கருத்துக்களையும், தலச்சிறப்புப் பற்றிய செய்திகளையும் ஒருங்கிணைத்துக் கூறும் நூல் என்பதனாற் சமய அறிவுக் களஞ்சியமாக இது விளங்குகின்றது. கோணேசர் கல்வெட்டு, திருக்கோணாசல புராணம் முதலிய நூல்களிலும் இதிலே காணப்படும் செய்திகள் பல விரித்துரைக்கப்படுகின்றன. இந்நூலானது பாயிரமும், இலங்கை மண்டலச் சருக்கம், திருமலைச் சருக்கம், புவனோற்பத்திச் சருக்கம், அர்ச்சனா விதிச் சருக்கம், மச்சாவதாரச் சருக்கம், தெட்சணாமூர்த்திச் சருக்கம், திருநகர்ச் சருக்கம் என்னும் ஏழு சருக்கங்களும் கொண்டு அமையப் பெற்றுள்ளது.

இத்தல புராணத்தின் முதலாவது சருக்கமாகிய ஈழ மண்டலச் சருக்கம் நாட்டுச் சிறப்பினை இலக்கிய ரசனையோடு சுவைநயம் படக் கூறுகின்றது. ஈழம், இலங்கை என்னும் நாட்டுப் பெயர்களை ஆசிரியர் விளக்கும் வண்ணமானது புதுமையானது.

''அமைத்த பொன்மலை ஆதலின் அப்பெயர் சமைத்த ஈழமிதென்று தழீயதால்'' எனவரும் அடிகள் ஈழம் என்னும் பெயர் ஏற்படுவதற்கான காரணத்தை விளக்குகின்றன. பொன்மலையான மேருவின் சிகரங்களுள் ஒன்றான திரிகூடம் என்னும் தென் கைலாசம் அமைவுற்றதால் இலங்கை ஈழம் என்றாகியது.

''இமைத்த மாமணி எங்கும் இலங்கலால்

உழைத்த நீர் வயலூரும் இலங்கையே''

எங்கும் பரந்து சிதறிக் காணப்படும் மணிகளின் ஒளியானது வயல்களிலெல்லாம் பரந்து பாய்கின்ற நீரிலே பிரகாசிக்கும் பான்மையால் இலங்கை என்னும் திருநாமம் நாட்டிற்கு உரியதாகியது என்பர். ஈழம், இலங்குதல் என்னும் சொற்களின் பொருளை அடிப்படையாகக் கொண்டு நாட்டுப் பெயர்களை முதன் முதலாக விளக்கிய சிறப்பு செகராசசேகரனுக்கே உரியது என்பதும் இங்கு குறிப்பிடற்குரியது.

## ஈழமண்டலச் சருக்கம்

01 விற்ற மாமணிக்கு என்கொல் விலையெனச்
சொற்றவர்க்கு ஓர்விலை எதிர் சொல்கலார்
உற்ற செஞ்சுடர் நாடொரும் ஓங்கலால்
அற்றை அற்றை அதிகம் உரைப்பரால்.

பொருள் : விலைபோய உயர்ந்த மாணிக்கக் கல்லின்விலை என்ன எனக் கேட்பவர்க்கு அதற்குரிய ஒரு விலையினைப் பதிலாகச் சொல்லார். ஏனெனில் செம்மைசான்ற ஒளிவீசும் மணிக் கற்களின் பெறுமானம் நாள்தோறும் உயர்ந்து செல்வதால் அன்றைக்கன்றே அவற்றின் பெறுமான விலையினைக் கூறுவர்.

02 பரவு பேட்டொடு பார்ப்புடை ஊர்க்குரீ
இரவு கூட்டிடைத் தீபம் இடும்படி
விரவு மின்மினி யென்றும் மின்காண்மணி
வரவு கொண்டு தன்வாய்கொடு எடுக்குமால்

பொருள் : பேடுடன் இணைந்து தன்குஞ்சோடு வாழும் ஊர்க்குருவி; இரவு நேரத்தில் தாம் வாழும் கூட்டிற்கு விளக்கு ஏற்றுவதற்கு,என்றும் ஒளிபரப்பிக் கொண்டே யிருக்கும் மணிக் கற்களைத் தன்வாயினால் எடுத்துக்கொண்டு வந்து கூட்டின் உட்பக்கத்தே அழகு பொருந்தவைக்கும்.

### மருதநிலவளம்

03 எடுத்து நீள்வரம்பு ஏத்து செய் எங்கணும்
மடுத்த நென்முளையாமென அன்னமும்
விடுத்து வால்வளை வெண் தரளங்களை
மடுத்து வாயுறக் கவ்வும் மருதமே.

பொருள் : நன்செய் நிலமாகிய நெல்வயலிடத்து, நீண்ட வரம்புகளை உயரமாக எடுத்து அமைவுறச் செய்ததால் நீர்வளம் சிறந்திருந்தது. அந்நீரிடத்தில் சங்குகள் முத்துக்களை ஈன்றுள்ளன. அவற்றின் ஒளி பசுமை நிறம் கொண்ட நெல் முளைகளின் நிறத்தைப் பெற்று வெளிவருகின்றன. அதனால் முத்துக்கள் நெல்முளைகள் போல் காட்சி அளிக்கின்றன. இதனைக் கண்ணுற்ற அன்னம் அவை நெல் முளைகளென எண்ணித் தம் அலகால் கவ்வும். இத்தகைய இயற்கை வளம் சிறந்து விளங்குவது வயலும்-வயல்சார்ந்த நிலமுங் கொண்ட மருதம்.

### குறிஞ்சிநிலவளம்

04 மேக நீர் அருவிப் பணைவிம்முற
நாக மாமணி நல்விளக்கு ஏந்த வந்து
தோகை ஆடச் சுரும்பு இசை பாடுவது
ஆக ஓங்கல் அலங் குறிஞ்சியே.

பொருள் : முகில்பொழியும் நீர்; மலை அருவியாகி நீர்த்தடங்களைச் செழுமையுறச் செய்கின்றது. நாகமானது தன்நாகரத்தினத்தினை நல்ல விளக்காக ஏந்தி நிற்கின்றது. அவ்வொளியில் மயில் தோகைவிரித்து ஆடுகின்றது. இவ்வாட்டத்

திற்கு வண்டுகள் இசை பாடுகின்றன. நாடு ஒருமைப்பாடு கொண்டிருப்பதனால் நாகமும் மயிலும் பகைமறந்து இன்புறுகின்றன. இவ்வியல்பினாற் புகழும் செழுமையும் அழகும் கொண்டு பெருமைபெற அமைந்துள்ளது. மலையும் மலை சார்ந்த நிலமுமாகிய குறிஞ்சி.

### முல்லைநிலவளம்

05 குறித்த வேய்ங்குழல் ஓதையும், கோற்கொடு
மறித்த காலின் மணிக்குரற் சும்மையும்
வெறித்த வேற்று வியன்பறைக் கௌவையும்
குறித்த தயிர்க்கடை ஓசையும் முல்லையே.

பொருள் : முல்லைநில மக்களான இடையர்கள் முல்லைப் பண்ணினை மூங்கில் கொண்டு தயாரிக்கப்பட்ட குழலின்மூலம் இசைக்கின்றனர். அவ்வினிசை ஓசைக்கேற்ப அவர்கள் வீரக்கழல் அணிந்த கால்களை மறித்து ஆடுகின்றனர். அதனால் எழும் கழல்களின் ஒலியும்-அடிபெயர்த்தாடும் தட்டின் ஒலியும் வெறியாட்டுக்கு முழக்கும் பல்வகைப்பட்ட பறைகளின் ஒலியும் இடையமகளிரான ஆய்ச்சியர் மத்துக்கொண்டு தயிரினைக் கடையும் ஒலியும் எங்கும் பரவுகின்றன. இவ்வினிய ஓசைகள் தம்முள் ஒன்றிணைந்து குழலின் ஓசையுடன்-கால்மறித்தாடும் கழலின் ஓசையுடனும் கலந்து முல்லை நிலமெங்கும் இனிமை பரப்புகின்றது.

### நெய்தல் நிலவளம்

06 ஏறு சங்கம் ஒலிப்பு, விலைத்தலைச்
சோறு தாழை சொரிதரப், புன்னை கண்
மாறில் காவணம் செய்ய மணம் செய்வார்
வீறுகொண்டது வெண்திரை நெய்தலே.

பொருள் : கடற்கரையில் கடல்படு திரவியங்களை விலைகூறும் வணிகர், சங்கொலி செய்து பண்டங்களின் இயல்பினைப் பகிர்ந்து ஒலி எழுப்புகின்றனர். தாழைமரங்களின் மடல்களில் முத்துக்கள் வெடித்ததனால் அதன் உள்ளிருக்கும் சோறு சிதறிச் சொரிகின்றது.புன்னைமரங்கள் தம்மலர்க் கண்களை விரித்து மலர் தூவி வேற்றுமைக்கிடனற்ற நல்வாழ்த்தினைத் தெரிவிக்கின்றன. இத்தகைய நலன்கள் சிறக்க நெய்தல் நிலமக்களான மீனவர்களும், மீனவப் பெண்களும் மனம் மகிழ்ந்து மணம் செய்வர். அதனால் இயற்கை அறமும்-பொருளும்-இன்பமும் இணைவு பெற்றிருக்கும் மேட்டிமை கொண்டது. வெண்டிரை வீசும் கடலும் கடல்சூழ்ந்த நெய்தல் நிலமும்.

### நானிலங் கொண்ட இலங்கை

07 நெய்தல் ஈறு, குறிஞ்சி நிலம் தலை
செய்த நால் நிலமும் திசை நான்கினும்
எய்தி, இந்த இலங்கை இலங்கலால்
உய்யும் எவ்வளமும் பிறந்து உள்ளதே.

பொருள் : மலையும் மலைசார்ந்து வளஞ்சிறந்து விளங்கும் குறிஞ்சி நிலத்தைத் தன் தலையாகவும், கடலும் கடல்சார்ந்து வளங்கொழிக்கும் நெய்தல் நிலத்தைத் தன் அடிப்பாகமாகவும், மருத நிலத்தை இதயமாகவும், முல்லை நிலத்தை

மற்றைய உறுப்புகளாகவும் கொண்டு நாட்டின் நான்கு திக்குகளிலும் பரவிப்பல் வளங்கட்கும் இடனாக இலங்கை அமைந்துள்ளதால், அனைத்துயிர்களும் நல்வாழ்வு பெறும் வளத்தினைப் பெற்றுள்ளது.

வேறு

08 பிறப்பு எல்லாம் மணியின் ஈட்டம்,
பெருக்கு எலாம் மணியின் யீட்டம்,
இறப்பு எல்லாம் நடையின் பேறே.
இலை யெனும் நடையின் பேரே,
சிறப்பு எலாம் முழுமெய்ச் சங்கம்
தெருவெலாம் முழுமெய் சங்கம்,
மறப்பு எலாம் வரையில் ஆரம்
வரையெலாம் வரைவில் ஆரம்,

பொருள் : நாட்டின் முகிழ்வன அனைத்தும் செழுமை கொண்டு அழகு செய்கின்றன. மலை அருவிப் பெருக்கிலும், கடல் அலைப் பெருக்கிலும், மணியும் முத்தும் பொலிகின்றன. இறந்தன எனக்கூறுவது, நடந்து நிறைவுபட்ட செயல்களையும் இல்லையென்ற சொற்களையுமே. இந்நாட்டகத்து அனைத்துச் சிறப்புகளும் முழுமை பெற்று நிறைந்துள்ளன. தெருக்கள் தோறும் முழுதுணர்ந்த சான்றோர் ஒன்றுகூடி உட்பொருள் ஆய்வு செய்கின்றனர்.மக்கள் மறந்தவை எல்லைக் கடங்காப் பொருட்குவைகளையே.

09 ஆரணம் முழக்கம் எங்கும்,
அலைகடல் முழக்கம் எங்கும்,
வாரணம் சொரியும் தானம்
மறையவர்க்கு அளிப்பர் தானம்,
பூரணமாகும் ஞானம் பொருந்திடா
அது அஞ்ஞானம்,
நாரணன் அனைய பூவை
நந்தன எங்கும் பூவை.

பொருள் : நாட்டின் மூலை முடுக்கெல்லாம் வேதம் ஓதும் ஒலிமுழங்கும். அவ்வொலி போல் கடலும் முழங்கும் புரவலர்கள், வேதம் வல்ல அந்தணர்களுக்கு யானைகளை அறக் கொடையாகக் கொடுப்பர். அனைவரிடமும் பேரறிவு நிறைந்துள்ளது. அங்கு இடம்பெறாது இருப்பதும் ஒன்றுண்டு. அது அறிவின்மை, சோலைகளிடத்துத் திருமாலின் நிறத்தையொத்த நாகணவாய்ப்பறவைகள் நிறைந்துள்ளன. அச்சோலைகள் அனைத்தும் தேன் சொரியும் அன்றலர்ந்த மலர்கள் நிறைந்துள்ளன.

10 பூ எலாம் துய்ய வாசம்
புனமெலாம் முனிவர் வாசம்
மா எலாம் குயிலின் ஓசை
மலையெலாம் குயிலின் ஓசை
கா எலாம் உயர்ந்த தாழை
கரையெலாம் கமழுந் தாழை
பா எலாம் அரனார் தன்சீர்
பகர்வரிது அன்னோர் தன்சீர்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

பொருள் : மலர்கள் அனைத்தும் இனிமைதரும் நறுமணம் உடையன காடுகள் அனைத் திலும் முனிவர்களே வாழ்கின்றனர். மாஞ்சோலைகளில் குயில்களின இனிய ஒசைகள் கேட்கின்றன. அவற்றினைக் கேட்ட மலைச்சோலைகளில் உள்ள குயில்களும் இன்னோசையெழுப்புகின்றன. கடற்கரைச் சோலைகளில் உயர்ந்த தென்னை மரங்கள் அமைந்துள்ளன. கடற்கரைகளில் நறுமணம் மிக்க மலர்களைப் பூக்கும் தாழை மரங்கள் நிறைந்துள்ளன. அதனால் நெய்தல் நிலம் புலால் நாற்றம் நீங்கி மலர் நாற்றத்தினைப் பெற்றுள்ளது. இசை பாடுபவர்கள் இறைவனின் புகழையே பாடுவர். அவ்வண்ணம் பாடும் அடியவர்கள் பெருமை யினைச் சொற்கள் கொண்டு விளக்குதல் அரிது. (தாழை = தென்னைக்கும்தாழைக்கும் பொதுப்பெயர்.)

11 அன்னைபோல் அளிப்பார் உண்டி
அனைவரும் சுத்த உண்டி
பின்னை என்னார்கள் ஐயம்
பெண்கடன் இடையே ஐயம்
என்னையாள் அரன் விழாவே
எங்கணும் பெருவிழாவே
தன்னைநேர் உழவர் பண்ணை
தண்கலை உணர்வோர் பண்ணை.

பொருள் : நாட்டில் வாழும் மக்கள் பசித்திருப்போர்க்குத் தாயன்புடன் உணவளிப்பார். அனைத்து மக்களும் சைவ உணவேயுண்பர். எதனையும் பின்பு செய்வோம் எனக்கூறும் வழக்கம் மக்களிடமில்லை. அத்தகைய வழக்கு இடம்பெறுதல் ஐயமே. (சந்தேகம்) பெண்கள் தம் கடமைகளில் தவறுவதில்லை. அவர்களிடம் ஒழுக்கக்கேடு இடம்பெறுதல் இல்லை. அப்படி எண்ணுபவர்கள் இருப்பதேஐயம். நாட்டில், என்னை ஆளும் இறைவன் விழாவே நிகழ்கின்றது. அது பெருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது. தன்னைத்தான் உணர்ந்த சான்றோர்களின் இருக்கைகளே எங்கும் நிறைந்துள்ளன. அல்லாத இடங்களில் வளம்மிக்க இன்கலை உணர்ந்த புலவர்கள் இருக்கைகள் நிறைந்துள்ளன. மூன்றாம் அடியில் உள்ள என்னை என்பதனை வினாவாகக் கொண்டு பொருள் காணின்; அன்னை போல் உணவு அளிப்போரும் சைவஉணவு உட்கொள் வோரும் நாட்டகத்து நிறைந்துள்ளனர். பின்செய்வோம் எனக் கூறுவோரும். பெண்களிடையே ஒழுக்கக்கேடுடையவர்களும் நாட்டகத்தில் இல்லாதிருக் கின்றனர். இவற்றுக்கு அடிப்படையாக விருப்பது அண்டமனைத்தையும் நெறிப் படுத்தி ஆள்கின்ற இறைவனின் கோயிலில் நடைபெறும் பெருவிழாவே. அன்றியும் மக்களின் வாழ்வை நெறிப்படுத்தத் தம்மை உணர்ந்த சான்றோரும். இன்கலை உணர்ந்த புலவர்களும் நாட்டகத்தில் நிறைந்திருப்பதுமாகும்.

12 பண்ணுவர் மறையோர் யாகம்.
பாடுநர்க் களிப்பர் தியாகம்
கண்ணுளர் புரிவர் ஆடல்
காவலர் புரிவர் ஆடல்
மண்ணுளர் புகழ வுண்டு
வருவிருந்து ஓம்பல் உண்டு
எண்ணுநர் விரைவிலாரை
ஏத்துநர் விரைவிலாரை

பொருள் : அந்தணர்கள் மறையோதி யாகம் செய்வர். இசை வல்லோர் நாதப் பிரமத்தைத் தம் இசையிடத்துக்கண்டு இன்புறுவர். தெளிந்த பார்வையுடைய சான்றோர் இறைவன் திருநடனத்தைக் கண்டு தாமும் ஆடி இன்புறுவர். நாட்டுக் காவலில் ஈடுபட்டோர்; எங்கும் அமைதியும் இன்பமும் நிறைந்துள்ளதால் தம்பணிசெய்யாது அவ்வேளையில் ஆடிமகிழ்வார். இதனைக்கண்டு மண்ணிடத்து வாழும் மக்களும் புகழ்ந்து வாழ்த்துவர். இந்நாட்டகத்து மக்கள். தம்மகத்து வரு வோர்க்கு இல்லையென்று கூறாது விருந்திட்டு மகிழ்வார். செயல்திறன் அற்றவர்களை எண்ணி அவர் நல்வாழ்வு பெறத் தக்காங்கு வழிசமைத்துக் கொடுப்பர்.

13 வரையெலாம் ஆரம் ஆரம்
வனமெலாம் நன்கார் நன்கார்
நிரையெலாம் சாலி சாலி
நிலையெலாம் கன்னல் கன்னல்
தரையெலாம் நீலம் நீலம்
தடமெலாம் நாறும் நாறும்
கரையெலாம் அன்னம் அன்னம்
கடலெலாம் ஈழம் ஈழம்

பொருள் : நாட்டில் அமைந்துள்ள மலைகளிடத்தில் உள்ள மூங்கில்களும் கரும்புகளும் முற்றிவிளைந்து முத்துக்களைச் சிந்திப் பரப்புகின்றன. மலைகளில் சந்தனமரங்கள் ஓங்கி வளர்ந்துள்ளன. அச்சந்தனச் சோலைகளில் சூல்கொண்ட முகில்கள் படிந்து நீர்வளத்தினைச் சுரக்கின்றன. அதனால் காட்டகத்தும் கார்இன நெற் பயிர்கள் செழுமை பெற்று வளர்கின்றன. செம்மைப்படுத்தப்பட்ட வயல் நிலங்களில் எல்லாம் சாலி இன நெற்பயிர்கள் செழுமைபெற்று வள மூட்டு கின்றன.வயல்வரம்புகளில் கரும்புகள் செழுமை பெற்றுள்ளன. நீர்த்தடாகங்களில் உள்ள உயிரினங்கள் இன்னிசை எழுப்புகின்றன. நிலம் எங்கும் மரகத-நீலநிற மணிக்கற்கள் நிறைந்துள்ளன. நீர்த்தடங்களில் நீலோற்பல மலர்கள் விரிந்து மணம் பரப்புகின்றன. நீர்த்தடங்களில் அன்னங்கள் நீந்தி விளையாடுகின்றன. கரைகளில் கவரிமான்கள் மகிழ்ச்சி கொண்டு துள்ளி விளையாடுகின்றன. ஈழத்தின் கடற்கரையில் பொன் கொழிக்கின்றது-கடல்படு திரவியங்கள் கரைவந்து சேர்கின்றன. இவை அனைத்தும் நிரைபட ஒழுங்கமைந்திருப்பதற்குச் சாலி என்று கூறப்படும் அருந்ததிபோன்ற கற்பின் மகளிர் நாட்டகத்தில் நிறைந்திருப்பதே ஏதுவாகும்.

14 ஈழமும் பளிங்குநேரும் எறி
நவ மணியும் எல்லாம்
தாழ மண் மடந்தை நல்கும்
தரளமும் சங்கும் துப்பும்
ஆழிஎன்று ஒரு நீர்த் தெய்வம்
அளித்திடு வரைமீது உள்ள
வேழம் என்ற அனேகமேகம்
வெளிறும் முத்து உகுக்கும் அம்மா.

பொருள் : நீர்வளத்தைத் தரும் கடல்தெய்வம்; பொன்னையும் பளிங்கு போன்ற ஒளிமிக்க ஒன்பதுவகை மணிக்கற்களையும்-முத்துக்களையும்-சங்குகளையும் மண்மகள் - தாங்கமுடியாது சுமக்கும் வண்ணம் நற்கொடையாக அள்ளிக் கொட்டும். (துப்பும்) மலைமீது படிந்துள்ள சூல்கொண்ட யானைகள் போன்ற முகில்கள் கடலிடத்து மொண்டெடுத்த வெண்முத்துக்களை மண்மகள்-தழும்பும்படி கொட்டும். (அம்மா - வியப்பிடைவந்த அசை.)

## அரும்பதங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வெண் தரளம் | - | வெண் முத்து. | விம்முற | - | செழுமையுற |
| பணை | - | பெரிய | நாகமாமணி | - | நாகப்பாம்பின் இரத்தினம் |
| தோகை | - | மயில் | சுரும்பு | - | வண்டு |
| ஓதை | - | ஓசை | கோற்கொடு | - | வீரக்கழல் |
| கௌவை | - | பறை | சங்கம் ஒலிப்ப | - | சங்கு ஒலித்தல் |
| சோறுதாழை சொரிதர | - | தாழை வெடித்து உள்ளிருக்கும் சோறு சிதறிச்சொரிய | | | |
| காவணம் | - | விரித்து | வெண்திரை | - | வெண்மையான அலைகள் |
| ஈறு | - | அந்தம் | இலங்கலால் | - | அமைந்துள்ளதால் |
| உய்யும் | - | நல்வாழ்வுபெறும் | ஆரம் | - | முத்து, சந்தனமரம் |
| முழுமெய் சங்கம் | - | முழுதும் உணர்ந்த சான்றறோர், முழுமை பெறல், ஒன்றுகூடும் சபை | | | |
| ஆரணம் | - | யானை | முழக்கம் | - | சத்தம் - |
| தானம் | - | கொடை | ஞானம் | - | அறிவு |
| அஞ்ஞானம் | - | அறியாமை | பூவை | - | நாகணவாய்ப் பறவை |
| பூவை | - | அன்றலர்ந்த | பூக்கள்துய்ய | - | நறுமணம் |
| புனம் | - | காடு | வாசம் | - | வாசனை |
| மா | - | சோலை (மாஞ்சோலை) | கா | - | சோலை |
| தாழை | - | தாழை மரம், தென்னை மரம் | பா | - | செய்யுள் |
| அரனார் | - | கடவுள் | தன்சீர் | - | சிவனார் பெருமை |
| நாற்றம் | - | வாசனை | உண்டி | - | உணவு |
| சுத்த உண்டி | - | சைவ உணவு | பின்னை | - | பின்பு |
| ஐயம் | - | சந்தேகம் | என்னை ஆள் | - | என்னை ஆழும் |
| அரன் | - | சிவ | பண்ணை | - | இருக்கை |
| தன்னை நேர் உணர்வோர் | - | தன்னைத்தான் உணர்ந்தோர் | | | |
| தண்கலை உணர்வோர் | - | இனியகலை உணர்வோர் | | | |
| மறையோர் | - | வேதத்தைக்கற்றோர் | யாகம் | - | வேள்வி |
| களிப்பார் | - | சந்தோசப்படுவர் | கண்ணுனத் | - | கற்றோர்கள் |
| காவலர் | - | பாதுகாவலர்கள் | | | |
| ஆடல் | - | நடனம் | விரைவிலார் | - | செயற்பாடு குறைந்தவர் |
| வரை | - | மலை - எல்லை | நன்கார்ண | - | சூல்கொண்டமுகில் நெல் |
| சாலி | - | நெல், அருந்ததி | கன்னல் | - | கரும்பு, யாழ்நரம்பில் எழும் இன்னிசை |
| நீலம் | - | நீலோற்பல மரம், நீலமணிக்கற்கள் | | | |
| அன்னம் | - | அன்னப்பறவை, கவரிமான் | | | |
| ஈழம் | - | இலங்கை நாடு, பொன் | | | |
| தரளம் | - | முத்து | | | |
| நவமணி | - | ஒன்பது வகையான மணிக்கற்கள் | | | |
| துப்பும் | - | அள்ளிக் கொட்டும் | | | |
| வரை | - | மலை | | | |
| வேழம் என்ற அனேகமேகம் | - | யானை போன்ற கருமுகில் | | | |

## பயிற்சி

1. ஈழமண்டலச் சருக்கத்தில் ஆசிரியர் மருத நிலக்காட்சியை எவ்வாறு சித்திரிக்கின்றார் ?
2. குறிஞ்சி நிலம் எவ்வாறு வருணிக்கப்படுகிறது?
3. முல்லைநிலக்காட்சியை விளக்குங்கள்.
4. நெய்தல் நிலத்தையும் அங்கு வாழும் மக்களையும் பற்றிக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுங்கள்.
5. நானிலங்கொண்ட இலங்கையின் தோற்றப்பொலிவு எவ்வாறு சித்திரிக்கப்படுகிறது.
6. இலங்கை மக்களைப் பற்றிக் கூறுவனவற்றைத்தொகுத்து எழுதுங்கள்.

2. கவிநயம் கூறுங்கள்.

வரையெலாம் ஆரம் ஆரம்
வனமெலாம் நன்கார் நன்கார்
நிரையெலாம் சாலி சாலி
நிலையெலாம் கன்னல் கன்னல்
தரையெலாம் நீலம் நீலம்
தடமெலாம் நாலும் நாலும்
கரையெலாம் அன்னம் அன்னம்
கடலெலாம் ஈழம் ஈழம்.
ஈழமும் பளிங்குநேரும் எறி
நவ மணியும் எல்லாம்
தாழ மண் மடந்தை நல்கும்
தாளமும் சங்கும் துப்பும்
ஆழி என்று ஒரு நீர்த் தெய்வம்
அளித்திடு, வரைமீது உள்ள
வேழம் என்ற அனேகமேகம்
வெளிறும் முத்தும் உருக்கும் அம்மா

## செயற்பாடு

குழுவாக இணைந்து குறிஞ்சி, முல்லை,மருதம், நெய்தல் நிலங்கள் பற்றிய வருணனைகளை எழுதுங்கள். அந்நிலங்களின் வருணனைகளை வகுப்பறையில் வாசியுங்கள் ஓவியங்களுடன் காட்சிப்படுத்துங்கள்.

## ஆக்கத்திறன்

# அறிக்கை

அறிக்கை பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுத வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அறிக்கை என்பது குறிப்பிட்ட விடயம் தொடர்பான தகவல்கள், தரவுகள், குறிப்புக்கள், கருத்துக்கள், என்பவற்றைத் திரட்டி ஆதாரபூர்வமாக எழுதப்படும் 'அறிக்கைப்'படுத்தும் ஆவணமாகும்.

நடைபெற்று முடிந்த நிகழ்வுகளுக்கு அறிக்கை எழுதப்படுவதுபோல, நடைபெறத்திட்டமிடப்படும் விடயங்களுக்காகவும் அறிக்கை எழுதப்படலாம். இவ்வறிக்கைகள் உண்மை பூர்வமாகவும், ஏற்புடையதாகவும் அமைய வேண்டும்.

அறிக்கை பல வகைகளில் அமையும், அவ்வவ்வகைகளுக்கேற்ப அறிக்கை எழுதும் முறைமையும் மாறுபடும்.

1. கூட்ட அறிக்கைகள்.
   நிர்வாகக்கூட்ட அறிக்கை
   பொதுக் கூட்ட அறிக்கை
   சென்ற கூட்ட அறிக்கை
2. ஆண்டறிக்கைகள்
3. வெளிக்கள அறிக்கைகள்
4. சுற்றறிக்கைகள்
5. செய்தி அறிக்கைகள்
   வானொலிச் செய்தி அறிக்கை
   தொலைக்காட்சிச் செய்தி அறிக்கை
   பத்திரிகைச் செய்தி அறிக்கை

## மாதிரி அறிக்கை

உமது பாடசாலையில் நடைபெற்ற இலக்கியமன்ற நிகழ்வுகள் பற்றிய சென்ற கூட்ட அறிக்கை.

சட்டகம்.

1. அறிமுகம்
2. இடம், காலம், நேரம்
3. தமிழ்த்தாய் வாழ்த்து
4. தலைவர் உரை
5. செயலாளர் அறிக்கை
6. பொருளாளர் அறிக்கை
7. பத்திராதிபர் உரை
8. நிகழ்ச்சிகள்
9. அதிதி உரை
10. சபையோர் கருத்துரை
11. நன்றியுரை
12. முடிவு

அறிமுகம் : எமது பாடசாலையான பாரதிபுரம் கபிலர் கல்லூரியின் நடப்பாண்டுக் கான மூன்றாவது இலக்கிய மன்றம் கடந்த வெள்ளிக்கிழமை 2007.03.30 திகதியன்று நடைபெற்றது. அன்று இனிதே நடைபெற்று முடிந்த மன்றம் பற்றிய அறிக்கையை செயலாளர் என்ற முறையில் உங்கள் முன் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இடம் : பாரதிபுரம் கபிலர் கல்லூரியின் தொல்காப்பியர் மண்டபம்.

காலம் : 2007.03.30.

நேரம் : நண்பகல் 12.00 - 1.30 மணிவரை

மேற்படி எமது கல்லூரியின் மூன்றாவது இலக்கியமன்றமானது நண்பகல் 12.30 மணியளவில் எமது கல்லூரி மாணவியரின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து மன்றத்தை ஆரம்பித்து வைக்கும் முகமாக தலைவர் உரை இடம்பெற்றது தலைவர் தமதுரையில் அன்றைய மன்றத்தின் அதிதியாக வருகை தந்திருந்த எமது கல்லூரியின். முன்னாள் முதல்வரும் இந்நாள் கல்வி அதிகாரியுமான திரு. தமிழன்பன் அவர்களை அன்புடன் வரவேற்றார். அத்துடன் எமது கல்லூரியின் முதல்வர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் வரவேற்றார். கடந்த மன்றங்கள் சிறப்பாக நடைபெறத் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கிய ஆசிரியர்கள் மற்றும் நிகழ்ச்சிகளை வழங்கிய மாணவர்கள் ஆகியோருக்குத் தமது நன்றியறிதலைத் தெரிவித்தார். (தேவையாயின் மேலும் விரிவுபடுத்தலாம்.)

அடுத்து செயலாளரால் கடந்த மன்ற அறிக்கை வாசிக்கப்பட்டது. செயலாளரால் வாசிக்கப்பட்ட அறிக்கை சரியென தரம் 12 ஐச் சேர்ந்த ஈழவேணி முன்மொழிய தரம் 13ஐச் சேர்ந்த லோஷினி வழிமொழிந்தார்.

இதையடுத்து பொருளாளரால் நிதியறிக்கை வாசிக்கப்பட்டது. பொருளாளரால் வாசிக்கப்பட்ட நிதியறிக்கையில் தரம் 12ஐச் சேர்ந்த மாணவர்கள் வழங்கிய பரிசுப்பொருள் பற்றிய விபரம் சேர்க்கப்படவில்லை என செல்வன் புருசோத்தமன் சுட்டிக் காட்டினார். பரிசுப்பொருட்கள் குறிப்பிடப்பட்டதாக தலைவர் கூறினார். இதையடுத்து அறிக்கை சரியென செல்வி சமீனா முன்மொழிய செல்வன் பிரதாபன் வழிமொழிந்தார்.

அடுத்து நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. தரம் 6 மாணர்வர்கள் செல்வி சுகந்தினியின் தலைமையில் ''ஓடி விளையாடு பாப்பா'' என்ற குழுப் பாடலை வழங்கி, செவிக்கு விருந்தளித்தனர்.

தொடர்ந்து தரம் 9 மாணவர்களின் நகைச்சுவை நாடகம் இடம்பெற்றது. இந்நாடகத்தில் மாணவர்கள் மட்டுமே பங்கேற்றுப் பெண் பாத்திரங்களையும் நடித்து அனைவரையும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்து மகிழ்ச்சிப்பரவசத்தில் ஆழ்த்தியமை குறிப்பிட்டுக் கூறத்தக்க விடயமாகும்.

இதையடுத்து மன்றத்தின் விசேட நிகழ்வான விவாதம் இடம்பெற்றது.

இலக்கியங்களில் உலாவும் கதாபாத்திரங்கள் மக்களை நல்வழிப்படுத்துகின்றன / நல்வழிப்படுத்தவில்லை என்ற தலைப்பில் உயர்வகுப்பு மாணவர்கள் விவாதித்தனர். இவ்விவாதத்தின் விசேட அம்சம் என்னவென்றால் மாகாணமட்டத் தமிழ்த்தினப் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்கள் விவாதத்தில் பங்குபற்றியமை ஆகும். அத்துடன் முன்னாள் எமது கல்லூரி அதிபரும் இந்நாள் கல்வி அதிகாரியுமான திரு. தமிழன்பன் அவர்கள் விவாதத்திற்கு நடுவு நின்று தீர்ப்பளித்தமையும் மற்றுமொரு சிறப்பம்சமாகும். அவர் தமதுரையில் மாணவர்களின் திறமையையும், கல்லூரியின் வளர்ச்சியையும் கண்டு தான் பெருமிதம் கொள்வதாகக் கூறினார்.

இதைத்தொடர்ந்து மன்றம் பற்றிய சபையோரின் கருத்துரை இடம்பெற இருந்தது. ஆனால் நாம் திட்டமிட்டபடி காலமகள் கைகொடுக்கவில்லை. ஆம். விவாதம் முடிவடையவே பி.ப 2.00 மணி கடந்து விட்டது. எனவே செயலாளர் நன்றியுரை வழங்க பாடசாலைக் கீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவெய்தியது.

பயிற்சி

1. இயற்கை அனர்த்தத்தால் பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு ஆதரவு தந்து அவர்களைப் பராமரிக்க ஒரு நிறுவனம் விரும்புகிறது. அதற்கான அறிக்கை ஒன்றைத் தயாரிக்கும் எழுதுநர் என உம்மைக் கருதி இது தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய வகையில் ஒரு வெளிக்கள அறிக்கை தயாரியுங்கள். (பெயர், இடம் என்பவற்றுக்கு புனை பெயர்களைப் பயன்படுத்துக.)

2. கடந்தமாதம் நடைபெற்ற உமது பாடசாலை இலக்கிய மன்றக்கூட்டத்தில் உமது பிரதேசத்தைச் சேர்ந்த சமூக சேவகர் ஒருவர் கௌரவிக்கப்பட்டதாகக் கொண்டு, மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வுகளை அறிக்கையாகச் சமர்ப்பியுங்கள்.

3. உமது பாடசாலை ஒருமாதகால விடுமுறையின் பின் மீண்டும் திறக்கப்பட்டதாகக் கொள்க. மீண்டும் பாடசாலை இயங்க ஆரம்பித்து ஒருசில கிழமைகளுக்குப் பின் பாடசாலையில் பயிலும் அநேகமானோர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்ததாகக் கொள்க. இதற்கான காரணத்தை ஆய்ந்து அறிக்கை ஒன்றை கல்லூரியின் முதல்வருக்குச் சமர்ப்பியுங்கள்.

4. உம்மை மக்கள் தொண்டு நிறுவனத்தின் வெளிக்கள அதிகாரியாக கருதிக் கொண்டு குறிப்பிட்ட பிரதேசத்தில் வசிக்கும் வறிய மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவற்றினை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகள் அடங்கியதாக வெளிக்கள அறிக்கை ஒன்றினை தயாரியுங்கள்.

5. வளர்பிறை கலாமன்றத்தின் செயலாளராக உம்மைக்கருதி, மன்றத்தின் இருபத்தைந்தாவது ஆண்டறிக்கையை தயாரியுங்கள்.

## மொழிவளம்

### குறில், நெடில் விகற்பம்

ஒலிப்பயிற்சிக் குறைவாற் குறிலுக்கும், நெடிலுக்குமுள்ள பேதமறியாது பொருள் மாறுபட எழுதுவோர் அவற்றின் வேறுபாட்டைக் கண்டுகொள்ளுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அணி | - | ஆபரணம் | குனி | - | குனிதல் |
| ஆணி | - | இரும்பாணி | கூனி | - | மந்தரை |
| உடல் | - | உடம்பு | கொள் | - | வாங்கு |
| ஊடல் | - | பொய்க்கோபம் | கோள் | - | கிரகம் |
| கண் | - | விழி | தடி | - | கம்பு |
| காண் | - | பார் | தாடி | - | மோவாய் மயிர் |
| பண்டம் | - | பொருள் | வலை | - | மீன்வலை |
| பாண்டம் | - | பாத்திரம் | வாலை | - | இளம்பெண் |
| படை | - | சேனை | | | |
| பாடை | - | மொழி | | | |

**பயிற்சி**

பின்வரும் சொற்களைப் பொருள் புலப்படுமாறு வாக்கியங்களிலமைத்தெழுதுங்கள்.

| | |
|---|---|
| வெற்றுரை | மனப்போர் |
| வேற்றுரை | மானப்போர் |
| சிறியபடை | மலைமாணிக்கம் |
| சீறியபடை | மாலைமாணிக்கம் |
| பலபாடம் | பனைசரிந்தது |
| பாலபாடம் | பானைசரிந்தது |
| சிலர்சென்றனர் | வனத்தினழகு |
| சீலர்சென்றனர் | வானத்தினழகு |

## இலக்கணம்

### ஏவல் வினைமுற்று

பின்வரும் வாக்கியங்களை வாசிப்போம்.

தம்பி போ.

தம்பி போகாதே.

மாணவர்களே, போகாதீர்கள்.

மேல்வந்த வாக்கியங்களில் போ, போகாதே போகாதீர்கள் என்பவை வினைச்சொற்கள் என்பதை அறிவீர்கள். ஆனால் இச்சொற்கள் முன்னிலையில் இருப்போரை ஒரு செயலை நிகழ்த்துமாறு பணிப்பதாக அல்லது ஏவுவதாக உள்ளன.

அதாவது

முன்னிலையில் இருப்போரை ஒரு வினையை நிகழ்த்துமாறு ஏவுவதற்கு பயன்படும் வினைவடிவம் ஏவல்வினை எனப்படும்.

இதனை

1.ஏவல் ஒருமை, ஏவல் பன்மை என்றும்

2.உடன்பாட்டு ஏவல், எதிர்மறை ஏவல் என்றும் பாகுபடுத்தலாம்.

1. ஏவல் ஒருமை

வா,போ, நில், இரு, நட, எழுது, உருட்டு, படி, புரட்டு, கைதுசெய், செய்துகாட்டு, போன்ற வினையடிகள் உடன்பாட்டு ஏவல் ஒருமை வினையாக வரும்.

எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்று

பின்வரும் சொற்களையும் அதன் உறுப்புகளையும் அவதானியுங்கள்.

செய்யாதே - செய் + ஆத் + ஏ

நில்லாதே - நில் + ஆத் + ஏ

இதில்,

செய், நில் என்பன வினையடிகள் ஆத் என்பது எதிர்மறை ஏவல் இடைநிலை ஏ என்பது எதிர்மறை ஏவல் விகுதியாகும்.

எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்று

வினையடி + ஆத் + ஏ எனும் அமைப்புடையதாக விளங்கும்

2. ஏவல் பன்மை வினைமுற்று

பின்வரும் சொற்களை வாசியுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| போங்கள் | போ + ங்கள் | எடுங்கள் | எடு + ங்கள் |
| செய்யுங்கள் | செய் + உங்கள் | நில்லுங்கள் | நில் + உங்கள் |

போன்ற சொற்களில் போ, செய், எடு, நில் என்பவை வினையடிகள் - ங்கள்- உங்கள்- என்பவை உடன்பாட்டு ஏவல் பன்மை விகுதிகள்

அதாவது ஏவல் பன்மை வினைமுற்று

வினையடி + ஏவல் பன்மை விகுதி

எனும் அமைப்பை கொண்டிருக்கும்.

-ங்கள்- -உங்கள்- என்பவை ஏவல் பன்மை விகுதிகளாகும்.

ஏவல் பன்மை வினைமுற்று பன்மையை உணர்த்தவும், ஒருமைப்பெயர்களுடன் மரியாதை உணர்த்தவும் பயன்படுகின்றன.

உதாரணமாக :-

மாணவ, மாணவிகளே வாருங்கள் (பன்மை)

மாமா வாருங்கள் (மரியாதை ஒருமை)

எதிர்மறை ஏவல் பன்மை வினைமுற்று

பின்வரும் சொற்களையும் அதன் உறுப்புகளையும் அவதானியுங்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| செய்யாதீர்கள் | - | செய் | + | ஆத் | + | ஈர்கள் |
| தொடாதீர்கள் | - | தொடு | + | ஆத் | + | ஈர்கள் |
| ஓடாதீர்கள் | - | ஓடு | + | ஆத் | + | ஈர்கள் |

இவற்றில் செய், தொடு, ஓடு என்பன வினையடிகள் -ஆத்- என்பது எதிர்மறை இடைநிலை -ஈர்கள்- என்பது முன்னிலை பன்மை விகுதி.

அதாவது எதிர்மறை ஏவல்பன்மை வினைமுற்று.

வினையடி + ஆத் + ஈர்கள் என்னும் அமைப்பை கொண்டது.

குறிப்பு :

தெரிநிலை வினைமுற்றும், ஏவல்வினைமுற்றும் உடன்பாடு, எதிர்மறை ஆகிய பாகுபாடுகள் கொண்டுள்ளன, என்பதை மனதில் கொள்ளுவோம்.

## பயிற்சி

கீழே தரப்பட்டுள்ள ஏவல் ஒருமை வினைமுற்றுக்களை

1. எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்றுக்களாகவும்
2. எதிர்மறை ஏவல் பன்மை வினைமுற்றுக்களாகவும்
3. உடன்பாட்டு ஏவல் பன்மை வினைமுற்றுக்களாகவும் மாற்றுங்கள்.

உ-ம் வா 1. வராதே - எதிர்மறை ஏவல் ஒருமை
2. வராதீர்கள் - எதிர்மறை ஏவல் பன்மை
3. வாருங்கள் - உடன்பாட்டு ஏவல் பன்மை
4. வாவேன் - உடன்பாட்டு ஒருமை

அடி, படி, ஆடு, கடத்து, நடித்துக்காட்டு, ஓடிப்பார், சிரி, அழு, பாடு, பார்

## செயற்பாடு

ஒரு கூடைக் கொழுந்து என்ற பாடத்தில் காணப்படும்.உடன்பாட்டு ஏவல்களை இனங்கண்டு எழுதுங்கள் அவற்றை எதிர்மறை ஏவல்களாக மாற்றி எழுதுங்கள்.